**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், முதுகுளத்தூர்.**

**O.S.No.98/2012**

2026ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 02 நாள் வாதி/பிரதிவாதி தரப்பில் சாட்சி வாக்குமூலம் 1983ம் ஆண்டு 1வது விதியின் ஏற்பாட்டின்படி உதவியாளரால் பிரமாணம் செய்யப்படுகிறது. உறுதி செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திரு.காசிநாதன் | தாலுகா | : |
| த/ பெயர்<br>க/ பெயர் | :<br>: | கிராமம் | : |
| வயது | : | தொழில் | : |

**பி.வா.சா.3**

நாள் : 02.02.2026

நேரம் : 12.05.P M

**முதல் விசாரணை**

நான் நீதிமன்றத்திலிருந்து வந்த அழைப்பாணைக்கு இணங்க சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் 4 வது பக்கம் மற்றும் கடைசி பக்கத்தில் உள்ள 2வது கையொப்பம் எனது கையொப்பம் தான். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தை என்னிடம் வாசித்து காட்டினார்கள். அதில் 2 சொத்துகள் குறிப்பிடப்பட்டிருந்தது. பி.வா.சா.ஆ.1 ஆவணம் ஏற்பட்டு சுமார் 17,18 வருடங்கள் இருக்கும்.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1)நீதிமன்றத்தில் அமர்ந்திருக்கும் 1ம்பிரதிவாதி நீதிமன்றத்திலிருந்து சம்மன் வருவதற்கு முன்னர் என்னை வந்து சந்தித்தாரா என்றால் இல்லை. நீதிமன்றத்திலிருந்து ஆணை வந்த பின்னர் பிரதிவாதியை போய் பார்த்தேனா என்றால் இல்லை. நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்தால் தான் சாட்சியம்அளிக்க வருவேன் என்று 1ம் பிரதிவாதி மற்றும் 1ம் வாதியின் மருமகனிடம் கூறினேன்.

எப்போது 1ம் வாதியின் மருமகனிடம் அவ்வாறு கூறினேன் என்றால் ஒரு வாரத்திற்கு முன்னர் நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்தது என்று இரு தரப்பினர்களிடமும் நானாகதான் சொன்னேன்.

2)நான் 1ம் வாதியின் மருமகனை சந்திக்கவில்லை என்றாலும், பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. சாட்சி சம்மனை பெற்று கொண்டு நேரடியாக நீதிமன்றத்திற்கு வந்தேனா அல்லது வழக்கறிஞர் அலுவலகம் சென்றேனா என்றால் நீதிமன்றத்திற்கு தான் வந்தேன். பி.வா.சா.ஆ.1 ஆவணம் நான் சென்ற பின்னர் எழுதப்பட்டதா அல்லது நான் செல்வதற்கு முன்னர் எழுதி முடிக்கப்பட்டதா என்றால் எழுதி கொண்டிருக்கும் போது சென்றேன். சாட்சி கையொப்பம் இட வாங்க மாமா என்று அழைத்தார்கள் அதனால் சென்றேன். எப்போது அழைத்தார்கள் என்றால் பத்திரம் எழுதும் போது தான் அழைத்தார்கள். எந்த ஆவணத்தின் அடிப்படையில் பி.வா.சா.ஆ.1 ஆவணம் தயார் செய்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பி.வா.சா.ஆ.1 ல் கண்ட வாசகங்கள் பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். 1வது வாதி பி.வா.சா.ஆ.1 ஆவணம் எழுதும் போது இல்லை என்றாலும், 12ம் பிரதிவாதி திருக்கம்மாள் மற்றும் 1ம் பிரதிவாதி ஆகியோர் வேறு நபரை வைத்து மேற்படி ஆவணம் உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

**12 முதல் 14, 16 முதல் 20 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் குறுக்குவிசாரணை இல்லை என்று கூறியதன் அடிப்படையில் குறுக்குவிசாரணை இல்லை என்று முடிக்கப்பெற்றது .**

விசாரணை முடிவுற்ற நேரம்: 12.20 PM

APARNA JUDIT CHARLES

Digitally signed by APARNA JUDIT CHARLES
Date: 2026.02.02 17:41:50 +0530